**200 வருடங்களாக இந்நாட்டின் பொருளாதாரத்துக்கு பாரிய பங்களிப்பை வழங்கி வருகின்ற மலையக மக்களின் குறிப்பாக மேல் மாகாணத்தின் களுத்துறை மாவட்ட மலையக மக்களின் அபிவிருத்தித் தொடர்பாக களுத்துறை மாவட்ட சிங்களம், முஸ்லிம் மலையக இளைஞர்கள் பெருந்தோட்டத்துறை மக்கள் குரல் அமைப்புடன் இணைந்து அரசாங்கத்துக்கு முன் வைக்கின்ற முன் மொழிவுகள் (கோரிக்கைகள்)**

பெருந்தோட்டத்துறை மக்கள் குரல் அமைப்பானது தென் மாகாணத்தின் காலி, மாத்தறை மற்றும் மேல் மாகாணத்தின் களுத்துறை மாவட்டம், வட மேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டம் மற்றும் கம்பகஹ மாவட்டத்தில் வாழ்கின்ற புலம்பெயர் மலையக மக்களின் உரிமை மற்றும் அபிவிருத்தி தொடர்பாக செயற்படுகின்ற ஒரு சிவில் சமூக அமைப்பாகும். இவ்வாறு மலையக மக்களோடு செயற்படுகின்ற போது அவர்கள் முகம் கொடுக்கின்ற பல பிரச்சினைகளை அடையாளங்கண்டு அவர்களுடன் இணைந்து நிலையான தீர்வை நோக்கி செயற்பட்டு வருகின்றோம். அதன் மேலுமொரு முக்கிய தருணமாக கடந்த காலங்களில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் மலையகம் இளைஞர்களிடையே நல்லிணக்கத்தை வளர்ப்பதற்காக சமூக ஒற்றுமை, சமாதானத்தை கட்டியெழுப்புதல், பாலின சமத்துவம், இனப்பெருக்க சுகாதார உரிமைகள் தொடர்பான செயலமர்வுகளையும் அனுபவப் பரிமாற்று நிகழ்ச்சிகளையும் எமது அமைப்பு நடாத்தியது. இதில் கலந்து கொண்ட இளைஞர்கள் மற்றும் யுவதிகள் மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடியதுடன் ஆழமான அலசல்களையும் மேற்கொண்டனர். களுத்துறை மாவட்ட செயலாளர், அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரச அதிகாரிகள், சமயத் தலைவர்கள் மற்றும் சிவில் அமைப்புக்களுடன் கலந்துரையாடி பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் எனவும், பிரச்சினைகளுக்கு தீர்வு காண தொடர் கோரிக்கைகளை முன்வைக்கவும் வேண்டுமெனவும் தீர்மானித்தனர். அதனடிப்படையில் மேற்படி பயிற்சிகளில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் இதற்கான பிரேரணையை தயாரித்துள்ளனர். அதன்படி, 2025.02.03 இன்றைய நாள் அந்தக் கோரிக்கைகளை நாங்கள் உங்களுக்கு வழங்குகின்றோம். இது தொடர்பாக கூடிய கவனம் செலுத்தி களுத்துறை மாவட்ட மலையக மக்களின் அபிவிருத்தியை கட்டியெழுப்ப செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**காணி உரிமை மற்றும் காணிக்கான உரித்து:**

1. 1993ம் ஆண்டிலிருந்து 1998ம் ஆண்டு வரை களுத்துறை மாவட்ட மலையக மக்களுள் சிலருக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் 7 பர்சஸ் காணி வழங்கப்பட்ட போதிலும் இவர்களில் 90 விகிதமானவர்களுக்கு இதுவரை எந்தவிதமான உத்தியோகப்பூர்வ ஆவணங்களும் (குறிப்பாக அறுதி உறுதி) வழங்கப்படவில்லை. உதாரணமாக, அஸ்கவெலி தோட்டம் (28 குடும்பங்கள் - 1993ம் ஆண்டு), முகமதியா தோட்டம் (25 குடும்பங்கள் - 2008ம் ஆண்டு), அரபலாகந்த தோட்டம் (60 குடும்பங்கள் - 2007ம் ஆண்டு), டெல்கிட் தோட்டம் (32 குடும்பங்கள் - 1996ம் ஆண்டு), ஹில்குரப்ட் தோட்டம் (33 குடும்பங்கள் - 1996, 1998ம் ஆண்டு) ஆகிய இடங்களை குறிப்பிடலாம். இதனால் இவர்கள் தங்கள் காணிகளை சுதந்திரமாக உரிமைக்கொள்ள முடியாதவர்களாக பல பிரச்சினைகளை சந்திக்கின்றனர். எனவே இம்மக்களின் காணிகளுக்கான உறுதிகளை வழங்கி இவர்களின் காணிகளுக்கான உரித்தை உறுதிச் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

2. இதுவரை காணி மற்றும் வீட்டு வசதிகள் கிடைப்பெறாத மக்களுக்கு காணி மற்றும் வீட்டு வசதிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். தற்போதைய அரசாங்கத்தால் மலையக மக்களுக்காக முன்னெடுக்கப்படுகின்ற காணி மற்றும் வீட்டுத் திட்டத்தில் களுத்துறை மாவட்ட மலையக மக்களுக்கு முன்னுரிமை அளிக்குமாறு கேட்டுக்கொள்வதோடு, பெருந்தோட்டங்களில் காணப்படுகின்ற காணி பிணக்குகளை தீர்ப்பதற்காக விசேட செயலணி ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென கோருகின்றோம்.
3. காணி கிடைக்கப் பெற்றாலும் கூட தமது காணிகளில் வீடுகளை கட்ட முடியாத நிலையில் வறுமைக்குள் வாழுகின்ற மலையக குடும்பங்கள் தங்கள் நிலத்தில் வீடு ஒன்றை கட்டுவதற்கான நிதி உதவிகளை வழங்குதல்.

**மலையக மக்களுக்கான அடிப்படை வசதிகளை வழங்குதல், அரச சேவைகளை உரிய முறையில் வழங்குதல்.**

1. பெருந்தோட்டங்களை அண்மித்த பகுதிகளில் சுகாதார சேவைகளைப் பெறுவதற்காக பிராந்திய ரீதியிலான வைத்தியசாலைகளை அமைத்தல் மற்றும் தற்போது செயலில் உள்ள வைத்தியசாலைகளில் மற்றும் மருத்துவமனைகளுக்கு வருகின்ற நோயாளர்களுக்கான வசதிகளை ஏற்பாடு செய்தல். (உதா: பாலிந்தநுவர, புலத்சிங்கள வைத்தியசாலைகளில் முறையான வசதிகள் இல்லாமை மற்றும் மருத்துவத்துவத்துக்காக வருகின்ற கர்ப்பிணி தாய்மார்களுக்கு வழங்குகின்ற ஆலோசனைகள் சிங்கள மொழியில் வழங்கப்படுவதால் தமிழ் தாய்மார்கள் பாதிக்கப்படுகின்றனர்.

2. குடிநீர் மற்றும் மலசலக்கூட வசதிகள் மற்றும் பிரதேச சபைகள் ஊடாக தோட்டங்களில் கழிவுகளை அகற்றும் பணிகள் முறையாக செயற்படாமையினால், கழிவுகளை முறையாக அகற்றுவதற்கான அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

3. தோட்டங்களுக்கு பிரவேசிக்கும் பாதைகள் மிகவும் பாதிப்புற்ற நிலையில் காணப்படுவதனால் மக்கள் பல இன்னல்களை சந்திக்கின்றனர். எனவே தோட்டங்களில் காணப்படுகின்ற பாதைகளை சீர்திருத்துதல் மற்றும் பாதைகளை முறையாக பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

4. உயர் நீதி மன்றம் வழங்கியுள்ள தீர்ப்புக்கு அமைவாக தோட்டங்களுக்கான தபால் சேவைகளை மேம்படுத்துதல் மற்றும் மலையக குடியிருப்புகளுக்கான சொந்த நிரந்தர முகவரியைப் பெற்றுக்கொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளல்.

5. அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற அஸ்வெசும, முதியோர் கொடுப்பணவுகள் இதுவரை வழங்கப்படாத மலையக மக்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் இதில் ஏற்பட்டுள்ள குறைப்பாடுகள் தொடர்பாக கண்டறிவதற்கான திட்டம் ஒன்றை முன்னெடுத்தல்.

6. அரச திணைக்களங்கள் மற்றும் செயலகங்களில் தமிழ் மொழி மூலம் கடமையாற்றக்கூடிய அலுவலர்களை நியமித்தல் மற்றும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

7. தற்போதை பொருளாதார நெருக்கடி காரணமாக மலையக பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு கல்வி மற்றும் உணவைப் பெற்றுக்கொடுப்பதிலே பல சிக்கல்களுக்கு முகம்கொடுக்கின்றனர். இன்றுவரை மலையக தொழிலாளர்களின் அநேகரின் நாளாந்த சம்பளம் 1350 ரூபாவாகவே காணப்படுகிறது. அதனடிப்படையில் அவர்களின் மாதாந்த சம்பளம் 22,000 ரூபாவாக மட்டுப்படுத்தப்படுகிறது. இந்த சம்பளத்தைக் கொண்டு தற்கால பொருளாதார நிலைமைக்கு ஈடுகொடுக்க முடியாதுள்ளதால் கடந்த அரசாங்கம் முன்மொழிந்த் 1700 ரூபாவை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**மலையகப் பிள்ளைகளின் பாடசாலை கல்வி மற்றும் தொழில் பயிற்சி வசதிகள்**

1. மேல் மாகாணத்தில் களுத்துறை மாவட்டத்தில் மலையகம் சார்ந்து காணப்படுகின்ற 36 தமிழ் பாடசாலைகளில் 12 பாடசாலைகள் சாதாரண தரம் வரையும், 08 பாடசாலைகள் மாத்திரம் உயர்தர பாடசாலைகளாக காணப்படுவதோடு சாதாரணதரம் கற்கும் மாணவர்களுக்கு கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சங்கீதம், நடனம், நாடகம் போன்ற பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை மலையக மாணவர்களின் கல்வியில் பல தடைகளை ஏற்படுத்துகிறது. உயர்தர வகுப்புகள் இருக்கின்ற பாடசாலைகளில் கூட கலை மற்றும் வர்த்தக பிரிவுகள் மாத்திரம் காணப்படுவதால் விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஏனைய துறைகளில் கல்வி கற்ற விரும்புகின்ற மாணவர்களுக்கு அத்துறைகளில் கல்விகற்க முடிவதில்லை. தமது பெற்றோரின் அர்ப்பணிப்பின் காரணமாக மலையக

பிள்ளைகள் ஒருபக்கம் கல்வியில் முன்னேற்றமடைந்தாலும், வறுமை மற்றும் ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக மாணவர்களின் பாடசாலை இடைவிலகல் தொகை அதிகரித்து வருகிறது. எனவே இது தொடர்பாக மேலான கவனத்தைச் செலுத்தி, உரிய ததரப்பினரோடு கலந்துரையாடி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

2. பாடசாலை கல்வியை நிறைவு செய்கின்ற மலையக மாணவர்களுக்கான தமிழ் மூல தொழிற்பயிற்சி நிலையங்களை உருவாக்குவதோடு, தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்துதல்.

3. மேல் மாகாணத்தின் களுத்துறை மாவட்ட தோட்டப் பிரதேசங்களில் வாழுகின்ற அதிகமான பெண் பிள்ளைகள் பாடசாலை கல்வியிலிருந்து இடைவிலகுகின்றனர். கல்வி அமைச்சு மற்றும் கல்வித் திணைக்களம் இது தொடர்பான தகவல்களைத் திரட்டி இப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வந்து மலையக பிள்ளைகளின் கல்வி நிலையை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

4. மலையக பிள்ளைகளின் உரிமைகள் மற்றும் கலை கலாச்சாரத்துக்கான திறமைகளை வளர்ப்பதற்காக பிரதேச செயலக பிரிவின் ஊடாக விசேட திட்டங்களை மேற்கொள்ளல்.

**மலையகப் பெண்களின் மேம்பாட்டை விருத்திச் செய்தல்.**

1. மலையகப் பெண்களுக்கும் சமூகத்தில் சிறந்த அந்தஸ்து கிடைக்க வேண்டும். எனவே இப்பெண்களின் கல்வி மற்றும் ஆளுமையை வளர்ப்பதற்காக பிரதேச செயலக பிரிவுகளில் விசேட திட்டங்களை முன்னெடுத்தல்.

2. பிரதேச, தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் ஏனைய பெண்களுக்காக வழங்கப்படுகின்ற சேவைகள் மலையகப் பெண்களையும் சென்றடைவதற்கான விசேட ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.

3. கிராமிய பெண்கள் முறையாக வங்கிகளில் கடனை பெற வேண்டுமானால் பல ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டிய நிலையில் சாட்சியாளர்களும் கையொப்பமிட வேண்டும். இதனால் பெண்கள் உத்தியோகப்பூர்வ வங்கிகளில் கடன் பெறாமல் அதிக வட்டியுடன் கடன் கொடுக்கும் நுன்கடன் நிறுவனங்களிடம் கடன்களைப் பெற்று மீள செலுத்த முடியாமல் பெரிதும் துன்பப்படுகின்றனர். எனவே இலகுவான முறையில் அரச வங்கிகள் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வங்கிகளில் கடன் பெறுவதற்கான சிறந்த முறைகளை ஏற்படுத்த வேண்டும்.

4. தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களில் மலசலக்கூட வசதிகள் மற்றும் ஓய்வறைகள் இல்லாமையால் பெண்கள் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர். ஏனவே இதற்கான வசதிகளை மேம்படுத்துமாறு தோட்டக்கம்பனிகளுக்கு அரசு ஆலோசனை வழங்க வேண்டும்.

5. தமது குடும்ப வறுமையின் காரணமாக மற்றும் தங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கோடு வீட்டுப்பணிப் பெண்களாக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள பெண்களின் குடும்பங்கள் மற்றும் பிள்ளைகளின் நிலைமைகளை ஆராய்து கண்காணிப்பதற்காக விசேட செயற்பாட்டுத் திட்டம் ஒன்றை அமுல்படுத்துதல்.

மேற்கூறப்பட்டுள்ள அனைத்து பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக இணை முகாமைத்துவ செயற்பாடு ஒன்றை ஆரம்பிப்பது மிக முக்கியமாகும். இதற்காக பெருந்தோட்டத்துறை மக்கள் குரல் அமைப்பு இணைந்து செயற்பட விரும்புகின்ற அதேவேளை மக்களை இணைப்பதற்கான பூரண ஒத்துழைப்பை வழங்கும்.